அரசிடம் உண்டா, அப்படி எத்தனை பள்ளிகள் கெஜட்டட் தலைமை ஆசிரியர்கள் போடப்படாமல் இருக்கின்றன என்று அறிய விரும்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது தான் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன். அதுபற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

THIRU C.V. RAJAGOPAL : Will the Hon. Minister be pleased to answer whether these Headmasters are recruited directly or appointed on seniority basis? How are they appointed?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒழுங்காகப் பள்ளியில் படித்தவர்களுக்கு இந்த விவரங்கள் நன்றாகத் தெரியும். சினியாரிட்டியைப் பார்த்துத்தான், பணிமூப்பு நிலையைப் பார்த்துத் தான், தலைமை ஆசிரியர் பதவி வழங்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: நண்பர் திரு. சி வி ராசகோபால் என்னுடைய 'கிளாஸ்மேட்'. அவர் 'தேர்டு பார்ட்' இல் 'பெயில்' ஆகிவிட்டார். நான் மேலே போய் விட்டேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் கூட சீனியாரிடியைப் பொறுத்து தலைமை ஆசிரியர் பதவி வழங்கும் முறை இப்போது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், சொல்ல முடியும். தனியார் பள்ளிகளில் அவர்களே பார்த்து பொறுக்கி நியமிக்கிறார்கள் என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால், அது பற்றி ஆராய்ந்து விளக்கங்கள் தர முடியும்.

Zoo

*40 Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to start a zoo in or near Madurai Corporation limits; and

(b) if so, the details thereof?

1972 ஆகஸ்ட் 18]

விலங்கு காட்சி சாலை

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாநகராட்சி எல்லைக்குள்ளோ அதன் அண்மையிலோ விலங்கு காட்சி சாலை ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Intensive Family Planning Programme

* 41 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. tne Minister for Public Health be pleased to state—

(*a*) the total number of males and females who underwent operation so far under Intensive Family Planning Programme in Tamil Nadu; and

(*b*) the district which stands first under this programme?

தீவிர குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

[redacted] **திரு. பி. திருஞானசம்பந்தம்** (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் தீவிர குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் எத்தனை (1) ஆண்கள், (2) பெண்கள், இந்நாள் வரை அறுவை சிகிச்சை செய்து கொண்டனர் ?

(இ) இதில் எந்த மாவட்டம் முதன்மை ஸ்தானம் வகிக்கிறது ?